பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 07 2026 SUNDAY 6.30 PM

தலைப்புச் செய்திகள்

1) மழை நீரை சேகரிப்போம் இயக்கத்திற்கு மக்கள் அளித்து வரும் ஆதரவு மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) மன் கி பாத் உரை மூலம் மக்களின் சேவைகளையும், சாதனைகளையும் பிரதமர் உலகறிய செய்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3) புதிய குடும்ப அட்டைகள் இனி தபால் மூலமே வழங்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

4) மீனவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் தவெக அரசு நிறைவேற்றும் என்று மாநில அமைச்சர் திரு ஸ்ரீநாத் கூறியுள்ளார்.

5) காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் Rishikantha Singh வெள்ளிப்பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>

மழை நீரை சேகரிப்போம் இயக்கத்திற்கு மக்கள் அளித்து வரும் ஆதரவு மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

விளையாட்டுத் துறையில் இந்தியர்கள் சாதனை படைத்து வருவதாகவும் பிரதமர் கூறினார்.

இதேபோல், அறிவியல் ஒலிம்பியாட்டிலும் நமது மாணவர்கள் முத்திரை பதித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

காதி பொருட்களின் விற்பனை கடந்த 12 ஆண்டுகளில் 6 மடங்காக அதிகரித்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

கடந்த ஆண்டுகளைப் போலவே நடப்பாண்டிலும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் முழுமையாக பங்கேற்க வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

இதற்கிடையே, நாட்டின் வளர்ச்சிக்காக மக்கள் ஆற்றிவரும் சேவைகளை உலகறிய செய்ய வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி, மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று வேலூர் அருகே சங்கரன்பாளையத்தில் பிரதமர் ஆற்றிய மன் கி பாத் உரையை பொதுமக்களோடு இணைந்து கேட்டபின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

<<<<<<>>>>>>

புதிய குடும்ப அட்டைகள் இனி தபால் மூலமே வழங்கப்படும் என்று உணவுத்துறை அமைச்சர் திரு வெங்கடரமணன் கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் இன்று ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நியாயவிலைக் கடைகளில் முக அங்கீகாரம் மூலம் பொருட்களை வழங்கும் முறை பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழக மீனவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் தவெக அரசு நிறைவேற்றும் என்று மீன்வளத்துறை அமைச்சர் திரு ஸ்ரீநாத் கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளத்தில் 74 மீனவர்களுக்கு செயற்கைக்கோள் தொலைபேசிகளை வழங்கி அவர் பேசினார்.

மீனவர்களின் பாதுகாப்பிற்கு தவெக அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன் அடிப்படையிலேயே, இந்த தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களின் கைரேகையை புதுப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி சினேகா கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------------

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே நகர்ப்புற வனப்பகுதியை உருவாக்கும் பணிகளை ஆட்சியர் திரு பிரவீன்குமார் தொடங்கிவைத்தார்.

--------------------

திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக காவல்துறையினர் மேற்கொண்ட சோதனைகளின் போது ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

--------------------

சிவகாசி அருகே சட்டவிரோதமாக பட்டாசு தயாரித்த குடோனில் நேரிட்ட வெடி விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

------------------

*விளையாட்டுச் செய்திகள்*

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் Rishikantha Singh வெள்ளிப்பதக்கம் வென்றார்.

கிளாஸ்கோவில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளின் ஆடவர் 60 கிலோ பளுதூக்கும் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் 200 மீட்டர் தொடர் நீச்சல் பிரிவில் இந்தியா இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

-------------

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Hansini Mathan வெள்ளிப்பதக்கம் வென்றார்.

17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

பிரான்சில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் Leon Luke Mendonca முதலிடத்தில் இடத்தில் உள்ளார்.

----------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் பட்டம் வென்ற இந்தியாவின் அனாகத் சிங்கிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

----------------

டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியா மீண்டும் முதலிடத்தை பிடித்தது.

<<<<<END>>>>>